## கனவுகள் பற்றி இஸ்லாம் -2

மனித வாழ்க்கையில் கனவுகள் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. நடக்க முடியாததை ஒருவன் எதிர்பார்க்கும் போது 'பகல் கனவு காணாதே ' என்று கூறுவதும் , சாட்சிகள் இல்லாமல் நடைபெற்ற காரியத்தை பேசும் போது 'ஊமை கண்ட கனவு போல்' என்று உவமை கூறப்படுவதும் கனவுகளின் பாதிப்பை உணர்த்தப் போதுமானதாகும்.
கனவு காணாதவன் மனிதனாக இருக்க முடியாது என்ற அளவுக்கு அனைவரின் வாழ்க்கையிலும் ஒரு அம்சமாக மாறிவிட்ட கனவு பற்றி இஸ்லாம் கூறுவதை விளக்குவதே இன்று நமது தலைப்பாகும்
கனவு பற்றி ஒருவன் எத்தகைய நம்பிக்கை வைத்திருக்கிறான் என்பதன் அடிப்படையில் அவனது வாழ்க்கையிலும் மாறுதல் ஏற்படுவதால் இதுபற்றி விளக்குவது அவசியமாகிறது.

'இஸ்லாத்தில் கனவுகள்' என்ற தலைப்பில் விளக்க ஆசைப்படுகிறோம்
இந்த நமது தலைப்பின் மூலமாக கனவுகளால் ஏற்படும் குழப்பங்களிலிருந்து நாம் விடுபடமுடியும்.
கனவுகளால் மக்கள் வழிதவறாமல் இருக்க நாம் சில தலைப்புக்களில் தகவலகளைக் கூற விரும்புகிறோம்.

### கனவுகள் மூன்று வகை

- நல்ல கனவுகள்
- நல்ல கனவு கண்டால்
- கெட்ட கனவுகளைக் கண்டால்
- காணாத கனவைக் கண்டதாகக் கூறுதல்
- நபிகள் நாயகத்தைக் கனவில் காணுதல்
- கனவில் வரும் உரிமை எவருக்கும் இல்லை
- கனவுகளின் பலன்கள்
- குர்ஆனிலும் நாயக மொழியிலும் கூறப்பட்டுள்ள சில கனவுகள்
- யூசுப் நபியின் கனவு
- இரண்டு கைதிகளின் கனவு
- மன்னரின் கனவு
- நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹஜ் செய்வதாகக் கண்ட கனவு
- எதிரிகளின் தோல்வியைக் கனவில் காணுதல்
- லைலதுல் கத்ர் இரவு பற்றிய கனவு
- ஈஸா நபியைக் கனவில் காணுதல்
- பல்வேறு அளவுகளில் சட்டையைக் காணுதல்
- பாலருந்துவது போல கனவு காணுதல்
- பொய் நபிகளைக் கனவில் காணுதல்
- உமரின் மாளிகையைக் காணுதல்
- ஹிஜ்ரத் பற்றிய கனவு

• உடைந்த வாளைக் காணுதல்

• கப்பல் படை

• திருமணத்திற்கு முன்பே மனைவியைக் காணுதல்

• தலைவிரி கோலத்தில் பெண்ணைக் காணுதல்.

## இஸ்லாத்தின் பார்வையில் கனவுகள்

கனவுகள் பற்றியும் அவற்றை எவ்வாறு எதிர் கொள்வது என்பதைப் பற்றியும் சரியான விளக்கம் இல்லாததால் இன்னும் பல மோசமான விளைவுகளும் ஏற்படுகின்றன.

நாம் கனவில் காண்பது யாவும் உண்மை நிகழ்ச்சிகள் தாமா?

கனவில் காண்பதை நடைமுறைப்படுத்துவது அவசியமா?
நாம் காணுகின்ற கனவுகள் நமக்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் அமைந்திருந்தால் என்ன செய்ய வேண்டும்? கவலை தரும் கனவுகளைக் கண்டால் நாம் என்ன செய்ய வேண்டும்?

1. நல்ல கனவுகளையும்,கெட்ட கனவுகளையும் வேறு படுத்தி எவ்வாறு அறிந்து கொள்வது?

2. கனவுகளின் பலன்களை எவ்வாறு கண்டறிவது?
என்பன போன்ற கேள்விகளுக்கு குர்ஆன் மற்றும் நாயக வழியை ஆதாரமாகக் கொண்டு விளக்கத்தை அறிந்து கொண்டால் கனவுகள் மூலம் ஏற்படும் விபரீதங்களிலிருந்து – தீமைகளிலிருந்து கேடுகளிலிருந்து நாம் விடுபட முடியும்.

## கனவுகள் பலவிதம்

1. எந்தக் கனவையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது. அதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை என்று சிலர் கூறுகின்றனர். இந்தக் கருத்தை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

2. கனவுகளில் அர்த்தமுள்ளவையும் உள்ளன. அர்த்த மற்றவையும் உள்ளன என்பது தான் இஸ்லாத்தின் நிலையாகும்.

## கனவுகள் மூன்று வகை

‘கனவுகள் மூன்று வகைப்படும். நல்ல கனவுகள் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் நற்செய்தியாகும். மற்றொரு கனவு ஷைத்தான் புறத்திலிருந்து கவலையை ஏற்படுத்துகின்ற கனவாகும். மூன்றாவது தன் உள்ளத்திலிருந்து மனிதன் காண்கின்ற கனவாகும்’ என்று நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறினார்கள்.
அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு)

**ஆதாரம்: முஸ்லிம் 4200**

## முதல் வகை கனவு

நமக்கு எதிர்காலத்தில் கிடைக்கவுள்ள பொருட்செல்வம் மழலைச் செல்வம் பட்டம் பதவிகள் போன்றவற்றை முன்கூட்டியே கனவின் மூலம் இறைவன் அறிவிப்பான். இது முதல் வகை கனவு. அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் நற்செய்தி என்பதன் கருத்து இது தான்.

## இரண்டாவது வகை கனவு.

கவலையை ஏற்படுத்தி வணக்க வழிபாடுகளில் உள்ள ஈடுபாட்டைக் குறைப்பதற்காகவும் ஷைத்தான் நடத்தும் நாடகம் இன்னொரு வகையான கனவாகும்.

## மூன்றாவது வகை கனவு.

நமது ஆழ் மனதில் பதிந்துள்ள எண்ணங்களும் கனவுகளாக வெளிப்படுகின்றன. இதில் மகிழ்ச்சியடையவோ கவலைப்படவோ ஒன்றுமில்லை. இதற்கு எந்த அர்த்தமுமில்லை. இது மூன்றாவது வகையாகும். முதல் வகையான நல்ல கனவு பற்றி குர்ஆன் மற்றும் நாயக மொழிகளின் வழியில் ஆராய்வோம்.

## நல்ல கனவுகள்

'நல்ல கனவுகள் நுபுவ்வத்தின் (இறைவனிடமிருந்து தூதர்களுக்கு கிடைக்கும் தூதுச் செய்தியின்) நாற்பத்தி ஆறு பங்கில் ஒரு பங்காகும்' என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.

அறிவிப்பவர்: உபாதா பின் ஸாமித் (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: புகாரி 6987, 6988, 6989, 6983, 6994)**

சில அறிவிப்புக்களில் '45ல் ஒரு பங்கு' என்று கூறப்பட்டுள்ளது.

**(ஆதாரம்: முஸ்லிம் 4200)**

வேறு சில அறிவிப்புகளில் '70ல் ஒரு பங்கு' என்று கூறப்பட்டுள்ளது.

**(ஆதாரம்: முஸ்லிம் 4205)**

நல்ல கனவுகள் நுபுவ்வத்தில் 45ல் ஒரு பங்கு, அல்லது 46ல் ஒரு பங்கு, அல்லது 70ல் ஒரு பங்கு என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறியதைச் சரியான முறையில் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## நபிமார்களுக்கு நான்கு வழிகளில் இறைச் செய்திகள்

இறைவனுடைய தூதர்களான நபிமார்களுக்கு நான்கு வழிகளில் இறைச் செய்திகள் கிடைத்தன.

1. நேரடியாக இறைவன் தனது தூதர்களிடம் பேசுதல்
2. வானவரை அனுப்பி அவர் வழியாக தனது செய்திகளைக் கூறி அனுப்புதல்
3. தான் சொல்ல நினைக்கும் செய்தியைத் தனது தூதரின் உள்ளத்தில் உதிக்கச் செய்தல்
4. கூற வேண்டிய செய்திகளைக் கனவின் வழியாகக் காட்டுதல்

முதல் மூன்று வழிகளில் இறைச் செய்தி வரும் என்பதை

**(அல் குர்ஆன் 42:51)** வசனத்திலிருந்து அறியலாம்.

وَمَا كَانَ لِبَشَرٍ أَن يُكَلِّمَهُ اللَّهُ إِلَّا وَحْياً أَوْ مِن وَرَاء حِجَابٍ أَوْ يُرْسِلَ رَسُولاً فَيُوحِيَ بِإِذْنِهِ مَا يَشَاءُ إِنَّهُ عَلِيٌّ حَكِيمٌ{51} وَكَذَلِكَ أَوْحَيْنَا إِلَيْكَ رُوحاً مِّنْ أَمْرِنَا مَا كُنتَ تَدْرِي مَا الْكِتَابُ وَلَا الْإِيمَانُ وَلَكِن جَعَلْنَاهُ نُوراً نَّهْدِي بِهِ مَنْ نَّشَاءُ مِنْ عِبَادِنَا وَإِنَّكَ لَتَهْدِي إِلَى صِرَاطٍ مُّسْتَقِيمٍ{52}

வஹீயின் மூலமோ திரைக்கப்பால் இருந்தோ அல்லது ஒரு தூதரை அனுப்பி தனது விருப்பப்படி தான் நாடியதை அறிவிப்பதன் மூலமோ தவிர (வேறு வழிகளில்) எந்த மனிதரிடமும் அல்லாஹ் பேசுவதில்லை. அவன் உயர்ந்தவன் ஞானமிக்கவன்.

**(திருக்குர்ஆன் 42:51,52)**

இந்த நான்கு வழிகளில் முதலிரண்டு வழிகள் இறைத் தூதர்களுக்கு மட்டும் உரியது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறுதித் தூதர் என்பதால் அவர்களுக்குப் பின் யாருக்கும் முதலிரண்டு வகைகளில் செய்திகள் வராது.

## இறுதி நபி என்பதற்கு சான்று

(அல் குர்ஆன் 4:79, 4:17,0 7:158, 9:33, 10:57, 10:108, 14:52, 21:107, 22:49, 25:1, 33:40, 34:28, 62:3) ஆகிய வசனங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறுதி நபி என்பதற்கு சான்றாகும்.
நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் எந்த நபியும் ரஸுலும் வர மாட்டார்கள் என்பதற்கு நாயக மொழிகளிலும் சான்றுகள் உள்ளன.

'இஸ்ரவேல் சமுதாயத்தினரை அவர்களின் நபிமார்கள் வழிநடத்திச் சென்றனர். ஒரு நபி மரணித்தவுடன் இன்னொரு நபி அவருக்குப் பகரமாக வருவார். நிச்சயமாக எனக்குப் பின் எந்த நபியும் இல்லை. கலீஃபாக்கள் தான் தோன்றுவார்கள். அவர்கள் அதிகமாகவும் இருப்பார்கள் என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம்: புகாரி 3455)

'தூதுத்துவமும், நபித்துவமும் முற்றுப் பெற்றுவிட்டன. எனவே எனக்குப் பின் எந்த நபியும் இல்லை. எந்த ரஸுலும் இல்லை' என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள். அப்போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'எனினும் நற்செய்தி கூறுபவை உண்டு' என்றார்கள். நற்செய்தி கூறுபவை என்றால் என்ன என்று நாயகத் தோழர்கள் கேட்ட போது 'முஸ்லிம் காணுகின்ற கனவாகும்' என்று விளக்கினார்கள்.
அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் (ரலியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம்: அஹ்மத் 13322)

(ஆதாரம்: அபுகாரி: 6990)

## உள்ளுணர்வு

மூன்றாவது வகையான உள்ளுணர்வை ஏற்படுத்துதல் அவ்வப்போது இறைத் தூதர்கள் அல்லாத மனிதர்களிடமும் ஏற்படலாம்.

ஈஸா நபியின் சீடர்களுக்கு இத்தகைய வஹீ வந்ததாக (அல் குர்ஆன் 5:111) வசனம் கூறுகிறது.

وَإِذْ أَوْحَيْتُ إِلَى الْحَوَارِيِّينَ أَنْ آمِنُواْ بِي وَبِرَسُولِي قَالُوَاْ آمَنَّا وَاشْهَدْ بِأَنَّنَا مُسْلِمُونَ{111} إِذْ قَالَ الْحَوَارِيُّونَ يَا عِيسَى ابْنَ مَرْيَمَ هَلْ يَسْتَطِيعُ رَبُّكَ أَن يُنَزِّلَ عَلَيْنَا مَآئِدَةً مِّنَ السَّمَاءِ قَالَ اتَّقُواْ اللّهَ إِن كُنتُم مُّؤْمِنِينَ{112}

என்னையும், என் தூதரையும் நம்புங்கள்!' என்று (ஈஸா அலைஹிஸ்ஸலாமின்) சீடர்களுக்கு நான் அறிவித்த போது 'நம்பிக்கை கொண்டோம்! நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீரே சாட்சியாக இருப்பீராக!' என அவர்கள் கூறினர். (திருக்குர்ஆன் 5:111)

தேனீக்களுக்கு இத்தகைய வஹீயை அனுப்பியதாக (அல் குர்ஆன் 16:68) வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

وَأَوْحَى رَبُّكَ إِلَى النَّحْلِ أَنِ اتَّخِذِي مِنَ الْجِبَالِ بُيُوتاً وَمِنَ الشَّجَرِ وَمِمَّا يَعْرِشُونَ{68} ثُمَّ كُلِي مِن كُلِّ الثَّمَرَاتِ فَاسْلُكِي سُبُلَ رَبِّكِ ذُلُلاً يَخْرُجُ مِن بُطُونِهَا شَرَابٌ مُّخْتَلِفٌ أَلْوَانُهُ فِيهِ شِفَاء لِلنَّاسِ إِنَّ فِي ذَلِكَ لآيَةً لِّقَوْمٍ يَتَفَكَّرُونَ{69}

'மலைகளிலும், மரங்களிலும், மனிதர்கள் கட்டுபவற்றிலும் கூடுகளை நீ அமைத்துக் கொள்! பின்னர் ஒவ்வொரு கனிகளிலிருந்தும் சாப்பிடு! உனது இறைவனின் பாதைகளில் எளிதாகச் செல்!' என்று உமது இறைவன் தேனீக்களுக்கு அறிவித்தான். அதன் வயிறுகளிலிருந்து மாறுபட்ட

நிறங்களையுடைய பானம் வெளிப்படுகிறது. அதில் மனிதர்களுக்கு நோய் நிவாரணம் உள்ளது. சிந்திக்கிற சமுதாயத்திற்கு இதில் சான்று உள்ளது.

(திருக்குர்ஆன் 16:68)

மூஸா நபிஅலைஹிஸ்ஸலாம் மின் தாயாருக்கு இத்தகைய வஹீயை அனுப்பியதாக

(திருக்குர்ஆன் 20:38) வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

إِذْ أَوْحَيْنَا إِلَى أُمِّكَ مَا يُوحَى{38} أَنِ اقْذِفِيهِ فِي التَّابُوتِ فَاقْذِفِيهِ فِي الْيَمِّ فَلْيُلْقِهِ الْيَمُّ بِالسَّاحِلِ يَأْخُذْهُ عَدُوٌّ لِّي وَعَدُوٌّ لَّهُ وَأَلْقَيْتُ عَلَيْكَ مَحَبَّةً مِّنِّي وَلِتُصْنَعَ عَلَى عَيْنِي{39}

அறிவிக்கப்பட வேண்டியதை உமது தாயாருக்கு நாம் அறிவித்ததை எண்ணிப் பார்ப்பீராக!

(திருக்குர்ஆன்,20:38)

தான் அறிவித்த செய்தியைப் பற்றி இவ்வசனங்களில் குறிப்பிடும் போது வஹீ என்ற சொல்லையே இறைவன் பயன்டுத்தியுள்ளான்.

இல்லாத செய்திகளை உள்ளுணர்வு ஏற்படுத்துவதன் மூலம் இறைவன் சிலருக்கு சில நேரங்களில் அறிவிப்பான் என்பதை இவ்வசனங்களின் வாயிலாக அறியலாம். இதுபோல் கனவுகள் மூலம் இறைச் செய்தி மனிதர்களுக்குக் கிடைக்கும் வாசலும் முழுமையாக அடைக்கப்படவில்லை. மேலே நாம் எடுத்துக் காட்டிய நா யகமொழி இதற்குச் சான்றாக அமைந்துள்ளது. உள்ளுணர்வு மூலம் இறைச் செய்தி கிடைத்தல் , கனவு மூலம் இறைச் செய்தி கிடைத்தல் என்பது இறைத்தூதர்களுக்கு வருவது போல் மற்றவர்களுக்கும் வரும் என நாம் நினைக்கக் கூடாது. இது போன்ற இறைச் செய்திகள் இறைத் தூதர்களைத் தவிர மற்றவர்களுக்கு எந்த வகையிலும் வந்து சேராது.

www.bathusha.com

Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**

**BATHUSHA.COM**